1972 மார்ச் 14]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: யாருக்கும் பம்புசெட்டுகள் வழங்கப்படவில்லை.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, ஹரிஜன் காலனியில் உள்ள ஹரிஜனங்களுக்கு பம்புசெட்டுகள் கொடுக்காவிட்டாலும், எத்தனைக் காலனிகளில் உள்ள தெருக்களுக்கு விளக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கேட்கப்பட்டிருக்கிற கேள்வி பம்பு செட்டுகளைப்பற்றித்தான். தெருவிளக்கு பற்றித் தனியாக கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்கப்படும்.

கோவை மாவட்டத்தில் ஏழைகளுக்கு நிலம்

*484. வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் 1970—71-ம் ஆண்டில் நிலமில்லாத ஏழைகட்கு வழங்கப்பட்ட மொத்த நிலம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 15,927.86 ஏக்கர்.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, அந்த நிலத்திற்கான மதிப்பு எவ்வளவு? மேற்கொண்டும் அங்கே இன்னும் அதிகமான நிலத்தைக் கேட்க அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நிலத்திற்கான மதிப்பு எவ்வளவு என்பது பற்றிய குறிப்பு என்னிடத்தில் இல்லை. மேற்கொண்டும் அரசாங்கத்திற்கு புறம்போக்கு நிலம் தேவையில்லை என்று சொன்னால், அதையும் பட்டா செய்து கொடுக்க ஆட்சேபணை இல்லை. அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, இந்த 15,000 ஏக்கர் நிலத்தில் ஏற்கெனவே விவசாயம் செய்தவர்கள் எவ்வளவு பேர், புதிதாக நிலம் அளிக்கப்பட்டவர்கள் எவ்வளவு பேர் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக் கேள்வி வேண்டும். அந்த விவரம் இல்லை.

திரு. நா. வெ. குருசாமி: அந்த நிலத்தில், ஒவ்வொரு ஆளுக்கும் எவ்வளவு நிலம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: புஞ்சையாக இருந்தால் 3 ஏக்கர், நஞ்சைக்காக இருந்தால் 1½ ஏக்கர் வீதம் கொடுக்கிறோம்.

கிராம அதிகாரிகள்

* 485. வினா—**திரு. எம். முத்தையா :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கிராம அதிகாரிகளாக பணிபுரியும் கர்ணம், கிராம முன்சீப்புகள் 1970-71-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் வரை யாரேனும் சஸ்பெண்ட் அல்லது டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ளனரா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர் ? அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ஒரு விவர அறிக்கை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் அதிகமாக கிராம அதிகாரிகள் சஸ்பெண்டு செய்யப்பட்டார்கள் என்று பேசப்படுகிறதே, அப்படி சஸ்பெண்ட் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர், அபராதம் கட்டியிருப்பவர்கள் எத்தனை பேர் என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிப்பட்ட ஒரு மாவட்டத்தை ஏதோ தண்டித்ததாக அங்கத்தினர் அவர்கள் பேசுகிறார்கள். அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்கலாம்.

Distribution of pongal packets to prisoners

* 439 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any pongal packets were distributed to the prisoners of the Madras Central Jail under the auspices of a local organisation;

(*b*) if so, the details thereof; and

(*c*) the reason as to how this local organisation was permitted to distribute the packets to the prisoners?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

@ 317–320ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.